1989, பிப்ரவரி 16]

(உ) மாநகராட்சிகளின் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல்.

திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 18 வயது நிரம்பிய வாக்காளர் பட்டியல் மே மாதம் 23 ஆம் தேதி தயாராக இருக்கும் என்று அறிவிப்புகள் சொல்லப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு நேற்று சொல்லியிருக்கின்றார்கள். ரம்ஜான் பண்டிகைக்குப் பிறகு மாநகராட்சித் தேர்தல் நடைபெறும் என்று சொல்லியிருக்கின்றார்கள். ரம்ஜான் பண்டிகை முடிகின்ற தேதி மே மாதம் 7-ம் தேதி. பிறகு இரண்டு வாரங்கள் என்று சொன்னார்கள். அப்படியென்றால் மே மாதம் 21-ம் தேதி முடிவடைகின்றது. ஆதலால் இந்த மாநகராட்சியினுடைய தேர்தலில் 18 வயதை உட்கொண்டு அவர்களையும் வாக்காளர்களாகப் பட்டியலில் சேர்த்து தேர்தல் நடத்தப்படுமா என்பதை நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைக் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்.

(ஊ) சட்டமன்றப் பேரவையிலுள்ள கட்சிகள் மற்றும் அணிகளின் பெயர்கள் குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றையதினம் அறிவித்ததற்கு இணங்க, சட்டமன்றப் பேரவையிலே கீழ்க்கண்ட பெயர்களில் கட்சிகளும் அணிகளும் இயங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் ?

1. சட்டமன்றக் கட்சிகள் (Legislature Parties) :

(1) திராவிட முன்னேற்றக் கழகம்.

(2) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (ஜெயலலிதா) அணி.

(3) இந்திய தேசியக் காங்கிரஸ்.